ஆயத்த அணிகல அங்காடி

(சுவர்ண மாளிகை)

போன்: 268

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

வைர நகை வியாபாரிகள்,

பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

# இடி

ஆசிரியர்:
பண்டிட் ஜெயிலானி, M. A. (U. S. A.) "விஷாரத்"
தாராபுரம்.

"தகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்டு"

ஆயத்த அணிகல அங்காடி

(சுவர்ண மாளிகை)

போன்: 268

P. A. ராஜு செட்டியார் & பிரதர்

வைர நகை வியாபாரிகள்,

பெரியகடைவீதி, கோயமுத்தூர்.

COIMBATORE DELY. 27 FEB 52 9 30 A.M.

இடி 2 | தமிழ் வாரச் செய்தித் தாள். 26–2–52 செவ்வாய்க்கிழமை | ஒலி 2

# சென்னையில் நமது எம். எல். ஏ.

## சுயேட்சை எம். எல். ஏக்களுக்கு கன்வீனராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!

நமது தொகுதி சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்கள் சென்னையில் முகாமிட்டு சுயேட்சை எம். எல். ஏக்களை ஒருமுகமாகச் சேர்க்கும் பணியில் இறங்கி இருக்கிறார். மயிலாப்பூரில் ஸ்ரீ சேனாபதிக்கவுண்டர் எம். எல். ஏக்குச் சொந்தமான பங்களாவில் எல்லா சுயேட்சை அங்கத்தினர்களின் கூட்டமும்தொடர்ந்தாற்போல் நடந்துவருகிறது. அந்த சுயேட்சை எம் எல். ஏக்களுக்கு நமது எம். எல். ஏவை கன்வீனராகத்தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சென்ற 7, 8, 13, 14, தேதிகளில் கூட்டம் நடைபெற்றது. மறுபடியும் மார்ச் 5-ம் தேதி வாக்கில் கூட்டம் நடைபெறும் என்று தெரியவருகிறது. இதுவரையில் நடைபெற்ற கூட்டங்களின் அந்தரங்கம் முழுதும் பத்திரிகாசிரியருக்கோ நிருபர்களுக்கோ பூரணமாகத் தெரிவிக்கப்படவில்லை என்று தெரிகிறது. மேலோட்டமாக சில செய்திகளே பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. மற்றும் சென்னையில் மற்றோரிடத்தில் காங்கிரஸ் அல்லாத எம். எல் ஏக்கள் மாநாடு நடந்துவருகிறது. அந்த மாநாட்டின் முடிவை இந்த சுயேட்சைகள் கட்சி பரிசீலித்து முடிவு தெரிவிக்கும் என்றும் தெரியவருகிறது.

பொதுவாக சுயேட்சை எம். எல். ஏக்களுக்குள் அபிப்பிராயபேதம் அதிகமிருக்காது என்றும் தெரிகிறது.

தாராபுரம் எம். எல். ஏ. ஸ்ரீ சேனாபதிக்கவுண்டர் அவர்கள் சுறுசுறுப்பாக எல்லா சுயேட்சை அபேட்சகர்களின் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டும் வேலையில் முனைந்திருக்கிறார். தினமும் சென்னையில் உள்ள நமது எல். எல். ஏ. இல்லத்திற்கு எல்லாப் பிரமுகர்களும் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்.

எம். எல். சி. தேர்தலுக்கு நிற்கப் போகும் சில அபேட்சகர்கள் சேனாபதிக்கவுண்டர் M. L. A வை அறிமுகம் செய்துகொண்டு அங்கு குழுமி இருக்கும் சுயேட்சை எம். எல் ஏக்களிடம் ஓட் கேன்வாஸ் செய்யும் வேலையில் முனைந்திருக்கிறார்கள்.

கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் கோஷ்டியினர் நமது எம். எல். ஏயின் அபிப்பிராயத்தை அறிய வந்து சென்றதாக அறிகிறோம். மற்றும் தி. மு. க. தலைவர்கள், தி. க தலைவர் பெரியார் முதலியவர்கள் ஸ்ரீ சேனாபதிக் கவுண்டரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு அவ்வப்பொழுது நடைபெறும் விஷயங்களில் பங்கு கொண்டிருப்பதாகவும் தெரிகிறோம்.

நமது ஸ்ரீ சேனாபதிக் கவுண்டர் அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றதும் நமது தாலூகாவில் பல பகுதிகளிலும் வரவேற்பு, தேனீர் விருந்து நடைபெற்றது. இன்னும் அனேக இடங்களுக்கு போக முடியாத நிலையில் அவைகள் ஒத்திப்போடப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் சென்னையில் சுயேட்சை எம். எல். ஏக்களின் விஷயத்தை கவனிக்க வேண்டியிருக்கிறது. சென்னையிலும் நமது எம். எல். ஏக்கு அனேக வரவேற்பும் தேனீர் விருந்தும் நடைபெற்றது. H. D. ராஜா அவர்களும், ஜூபிடர் சோமு, வி. எம். பி, முத்துசாமி செட்டியார், செங்கல்பட்டு ஜில்லா போர்டு தலைவர் T. ஷண்முகம் பிள்ளை [illegible]யவர்கள் தேனீர் விருந்தளி[illegible] சென்னை அலுவல்களை முடி[illegible] கொண்டு தற்பொழுது தாராபுரத்[illegible] இருக்கிறார். 27-ம் தேதி வாக்கில் மீண்டும் சென்னை செல்வார் என்றும் தெரிகிறது.

பண்டிட் ஜெய்லானி
எழுதிய

ஜி. டி. நாயுடு
வாழ்க்கை

வெளிவந்துவிட்டது.
விலை அணா மூன்று
விற்பனையாளர்களுக்கு 20%
கமிஷன் உண்டு

(இடி) பிரசுராலயம்,
தாராபுரம்.

# சுயேட்சை எம். எல். ஏக்களே!

சென்னை மாகாணம் இந்தியாவுக்கே இந்தத் தேர்தலில் வழிகாட்டி இருக்கிறது. சென்ற சில ஆண்டுகளாக காங்கிரஸ் சர்க்கார் மக்களுக்குச்செய்த கொடுமைகளை சென்னை மாகாணம் தனது ஓட்டுகள்மூலம் நல்ல தீர்ப்பு வழங்கி இருக்கிறது. நமது மாகாணத்தின் முடிவால் டில்லி சர்க்காருக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் காங்கிரஸ் மந்திரிசபை அமையாது என்ற நம்பிக்கை மக்களுக்கு மாத்திரமல்ல, காங்கிரஸ் பிரமுகர்களும் தெரிந்து கொண்டனர். எம்படியாவது வேறு மந்திரி சபை அமையவேண்டுமென்று பொதுமக்கள் ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருக்கின்றனர். அதே நேரத்தில் அமையப்போகும் மந்திரி சபையால் எந்த நன்மைகளையும் செய்ய முடியாது என்றும், அதை விரைவில் கவிழ்த்திவிட முடியும் என்றும் காமராஜர்கள் கருதிக்கொண்டிருக்கலாம். இதற்கு உதவியாக சுயேட்சை எம். எல். ஏக்களை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கருதுகிறார்கள். சுயேட்சை எம். எல். ஏக்கள் பொது [illegible] காங்கிரசோடு ஒத்துழைக்க [illegible]டார்கள். அதேசமயத்தில் அவர் [illegible] கம்யூனிஸ்ட் கட்சியோடு ஒத்து[illegible]க்காமல் செய்துவிட்டால் மந்திரி சபை அமைப்பே நடைபெறாது என்று காங்கிரஸ் திரை மறைவில் வேலை செய்கிறது. ஆகவே சுயேட்சை எம். எல். ஏக்கள் இதை நன்குணர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டணி வகிக்குமாறு வேண்டுகிறோம். கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றி தாறுமாறுகப் பொருளாளர்கள் பத்திரிகை இதுவரை துஷ்பிரசாரம் செய்து வந்திருக்கிறது. கொலை, கொள்ளை, இவைகள்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை என்றும் அவர்களோடு சேரவேண்டாம் என்றும் பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. பகுத்தறிவுக் கண்கொண்டு பார்த்தால் எந்தக் கட்சியின் லட்சியமும் கொலை, கொள்ளை அடிக்கத்தூண்டாது. அப்படி அவர்கள் கொலை, கொள்ளை செய்திருந்தால் தெலிங்கானு மக்கள் இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளைத் தேர்ந்தெடுத்திருப்பார்களா? என்பதை சிந்தித்துப்பார்த்தாலே தெரியவரும்.

சுயேட்சை எம் எல். ஏக்களுக்கு இப்பொழுது ஒரு சோதனை காலம். அவர்கள் காங்கிரஸ் பேரில் உள்ள வெறுப்புணர்ச்சிகளைப் பயன்படுத்தியே தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது கம்யூனிஸ்டுகளோடு கூட்டணி வகுக்காவிட்டால் கம்யூனிஸ்டுகள் மந்திரிசபையில் கலந்துகொள்ள மாட்டார்கள். மீண்டும் கம்யூனிஸ்ட்டுகள் பொது மக்களிடையே "இந்த சுயேட்சை வாதிகளுக்கு லட்சியமில்லை! இவர்கள் பணமூட்டை! இனி வரும் தேர்தலில் சுயேட்சையாளர்களை ஆதரிக்கவேண்டாம் இவர்கள் காங்கிரஸ்காரர்களின் தோழர்கள்" என்று பிரசாரம் செய்தால் ஆங்காங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சுயேட்சை எம். எல். ஏக்கள் நிலைமை மிகவும் பரிதாபத்துக்கிடமாகும். ஆகவே சுயேட்சை எம். எல். ஏக்கள் எப்படியாவது கம்யூனிஸ்ட், பிரஜா, த. உ. கட்சிகளோடு ஐக்யப்பட்டு மந்திரிசபை அமைத்து குறைந்தபட்ச நிவாரணத்தையாவது செய்யும்படி அன்பாய்வேண்டிக்கொண்டிருக்கிறோம்.

இன்றைய கம்யூனிஸ்ட் கட்சியில் மணிபோன்ற இளைஞர்கள் நிரம்பியுள்ளனர். வாழ்க்கை முழுதும் கட்சிக்காக பாடுபடுபவர்கள். கட்சியின் பேரால் ஒரு தம்பிடிகூட சம்பாதிப்பவர்கள் அல்ல. இந்த நேரத்தில் மாற்றுக்கட்சியில் நட்சத்திரம்போல் (Star value) பிரகாசித்துக்கொண்டிருக்கும் அரசியல் வாதிகளைப் பாருங்கள். அவர்கள் சுகபோக வாழ்க்கை, மாடமாளிகைகள், பர்மிட் வேட்டை இத்தனையும் நமது கண்முன் நிற்கிறது. ஆனல் கம்யூனிஸ்ட் கட்சியில் தொண்டாற்றும் இளைஞர்களுக்கு இதுவரை பெற்ற பரிசெல்லாம் சிறைவாசம், சிறையிலே துப்பாக்கி குண்டடி! தலைமறைவு வாசம் இவ்வளவுதான்!

விலை மதிக்கமுடியாத இந்த இளைஞர்களோடு சுயேட்சை எம். எல். ஏக்கள் கூட்டணி வகுத்து மந்திரிசபை அமைத்து நற்பணிபுரிய வேண்டுகிறோம்.

---

## வரப்பெற்றோம்.

பகுத்தறிவு ஆண்டு மடல் வரப்பெற்றோம் தோழர் **ப. கண்ணன்** அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் எந்தப் பத்திரிகைக்கும் மதிப்புரை தேவை இல்லை. தோழர் கண்ணன் இன்று நேற்று புதிதாக முளைத்த எழுத்தாளர் அல்ல. பல்லாண்டுகளாகப் பகுத்தறிவுப் பணிசெய்து வருபவர். தமிழ் நாட்டில் பகுத்தறிவுக்கென நடக்கும் பத்திரிகை இது ஒன்றே. எந்த அரசியல் கட்சிக்கருத்துக்களையும் இணைக்காமல் தனிமையாக நின்று சீர்திருத்தப் பணியாற்றுகிற "பகுத்தறிவையும்" தோழர் கண்ணனையும் நாம் வெகுவாகப் பாராட்டுவதுடன் ரஸிகர்களும் ஆதரிக்கவேண்டுகிறோம்.

---

**ஸ்டேண்டர்டு கிராஸ்வேர்ட்ஸ்**

புகழ்பெற்ற ஆங்கிலம் தமிழ்
1, 2 வார்த்தை போட்டி ஸ்தாபனம்.
**கலெக்டர்கள் தேவை**
**கோயமுத்தூர்**

**சந்திரன் காலேஜ் ஸ்கூல்**
**298, இடையர் வீதி, கோயமுத்தூர்**
1 வருஷந்தில் 14 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் E. S. L. C. க்கும், 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம் S. S. L. C. இண்டர் வகுப்பு ஹாஸ்டல் உண்டு.
தலைவர் C. R. Chandran.

வர்த்தக வளர்ச்சிக்கு
**வஸந்தா தியேட்டரில்**
**சிலைடு விளம்பரம் செய்யுங்கள்**
**தாராபுரம்.**

# இடி இடிக்கிறது!

கம்யூனிஸ்ட் கூட்டுறவோடு நம் மாகாணத்தில் மந்திரிசபை அமைந்தால் உடனடியாக எதைப் பரிசிலனை செய்வார்கள்?

செல்லப்பன், தாரை

அம்மாதிரி மந்திரிசபை அமைந்தால் முதலில் இதுவரை நமது காங்கிரஸ் மந்திரிகளும், எம். எல். ஏக்களும், செய்த திருவிளையாடல்களையும், பர்மிட் வேட்டை ரகசியங்களையும், மந்திரி யாவதற்குமுன் எவ்வளவு சொத்து இருந்தது என்பதைப் பற்றியும் இப்பொழுது அவர்களது பொருளாதாரம் எவ்வளவு உச்சநிலையில் இருக்கிறது என்பதைப்பற்றியும், மற்றும் அவர்கள் சுற்றத்தாருக்குச் செய்த வசதிகளையும் பழைய பைல்களைப் புரட்டிப் பார்த்து இலகுவான விலையில் எல்லோரும் வாங்கிப் படிக்கும் படியாக 'ஜனசக்தி' காரியாலத்திலிருந்து பல புத்தகங்கள் வெளிவரும். அவைகளைப் பொது மக்கள் படித்துப் பார்த்தால் இந்தக் காங்கிரஸ் என்ன கதிதான் நேருமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

●

குள்ளம்பாளையம் நடராஜக் கவுண்டரும், அவரது மாமனார் கரியாக்கவுண்டன்புதூர் மைனர் என்று அழைக்கப் படுகிற A. K. சுப்பராயக் கவுண்டரும் கிணறு வெட்டுவதற்கென்று பல ஆயிரம் ரூபாய் லோன் வாங்கியதுண்டா?

பல்லவராயன், தாராபுரம்

நாம் சொன்னால் நீர் நம்பமாட்டீர். இனி அமையப்போகும் மந்திரிசபையில் நமது தொகுதி எம். எல் ஏ. மூலமாக கேள்வி கேட்கப்பட்டு, புள்ளி விபரமாகப் பதில் சொல்லும்போது நீர் திடுக்கிட்டுப் போவீர்!

●

பெண் ஏன் அடிமையாகவே ஆக்கப்பட்டாள்.

ரஷித், அலங்கியம்.

ஆண்கள் சம்பாதித்துக் கொண்டே இருப்பதால்!

முனிசிபாலிடியில் உத்தியோகம் கொடுக்கும் கமிட்டியில் கவுன்சிலர் அங்கமுத்து பதவி வகித்திருக்கிறாரே மற்றவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கிற அளவிற்கு அவருக்கு என்ன படிப்பிருக்கிறது?

வேலாயுதம், தாரை

அவர் படித்திருக்கிறார்! முட்டாள்களுக்கு முதல் வாத்தியார். உத்தியோகம் கொடுப்பதற்கு லாயக்குடையவர் அல்ல! உத்தியோகஸ்தருக்கு ..................கொடுப்பதற்கு லாயக்குடையவர்.

●

எம். ஆர். ராதாவின் நாடகத்தை ராமவிலாஸ் தியேட்டரில் நடத்தவிடாமல் ஈ. வி. ஹிரண்ணப்பராவ் செய்ததின் மர்மம் என்ன?

குட்டி, தாரை

அப்படி தடை செய்தால்தான் எம். ஆர். ராதா திறந்தவெளி நாடகம் நடத்தி பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் களிக்கமுடியும். அதனால் நடராஜக் கவுண்டருக்கு தோல்வி ஏற்படலாம் என்று கருதி ஒரு சமயம் ஈ. வி. ஹிரண்யப்பராவ் அந்தக் கைங்கரியம் செய்திருக்கக்கூடும் என்று ஒரு நண்பர் கூறுகிறார்.

●

ஈ. வி. ஹிரண்யப்பராவ் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

மருதாசலம், தாரை

அவர் தேர்தல் காலத்தில் மறந்து போன தமது ஸ்டெஸ்கோப் (நாடி பார்க்கும் கருவி) மருந்துப் பெட்டியையும் தேடிக்கொண்டிருக்கிறார்.

●

தாராபுரத்தில் தீவிர காங்கிரஸ் ஊழியர் யார்?

அங்கண்ணன், தாரை

தோழர் காத்தசாமி!

உலகில் சுறுசுறுப்பான நாட்டினர் எவர்?

ஜப்பானியர்

●

உலகிலே குறைவான சம்பளம் பெறும் மந்திரிகள் உள்ள தேசம் எது

எகிப்து!

## தாராபுரம் தொகுதி வாக்காளர்களுக்கு வணக்கம்

நடைபெற்ற தேர்தலில் எம்மைத் தங்கள் மதிப்பு வாய்ந்த வாக்குகளால் தேர்ந்தெடுத்தமை குறித்து நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எமக்காக இரவு பகலாக அரும் பாடுபட்ட மாணவ மணிகளுக்கும், இயக்கத் தோழர்களுக்கும், ஆங்காங்கே உள்ள எம்பால் அன்பு கொண்ட பிரமுகர்களுக்கும், வாக்காளர்களுக்கும் எம் இதயம் கனிந்த வணக்கத்தைக் கூறுகிறேன்.

வழக்கம்போல் பொது நலத்திற்கு எம்மாலியன்ற பணிபுரிவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

தங்கள் ஊழியன்,

A. சேனாபதிக்கவுண்டர்,
M. L. A.
தாராபுரம்.

# காங்கிரசா? காமராஜரா?

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் பெரும் தோல்வியடைந்ததற்குக் காரணம் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார். சிலர் காமராஜரின் தலைமைப் பீடம்தான் காங்கிரஸ் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும், காமராஜருக்குப் பதிலாக வேறு யாரும் இருப்பின் இந்நிலை ஏற்பட்டிருக்காது என்கிறார்கள். காங்கிரஸ் வட்டாரத்தில் ராஜாஜி குழுவினர் இந்த அபிப்பிராயத்தைப் பொதுவாகக் கூறுவதுண்டு.

காமராஜர் தலைமைப்பீடம்தான் காங்கிரசுக்குத் தோல்வியை வாங்கிக் தந்தது என்று கூறுவதில் அர்த்தமே இல்லை. காமராஜ் தமது சக்திக்குஏற்றபடி ஓரளவு பொருளாதார வசதியுடையவர்களையும், அந்தந்தப் பகுதியில் பெருவாரியான ஜாதியைச் சார்ந்தவர்களிலே இன்றுள்ள தேர்தலில் பணம் செலவு செய்பவர்கள்தான் தேர்தலில் வெற்றிபெற முடியும் என்றும் முன் கூட்டியே அறிந்த காமராஜர், வசதியுடையவர்களைத்தான் தேர்தலில் நிறுத்தியிருக்கிறார். ஓரளவு 152-ஸ்தானங்களைக் காங்கிரஸ் இன்று கைப்பற்றி இருப்பதற்குக் காமராஜின் தனித்திறமையேயல்லாது காங்கிரசிடம் மக்கள் நம்பிக்கைவைத்து தேர்ந்தெடுக்கவில்லை. உதாரணமாக கோவை ஜில்லாவில வி. கே. பழனிச்சாமிக் கவுண்டரைவிட, வி. சி. பழனிசாமிக் கவுண்டரைவிட, ஒரு மகாலிங்கத்தைவிட வேறு எப்படி செல்வாக்கான ஆட்களைத் தேர்ந்தெடுத்தால் காங்கிரஸ் வெற்றி பெற்று இருக்க முடியுமா? நிச்சயமாக வெற்றி பெற்றிருக்க முடியாது. அதனால் அந்த வெற்றிகளின் பெருமை அனைத்தும் காமராஜரையோ அல்லது வி. கே. பி. வி. ஸி. பி. மஹாலிங்கத்தின் வெற்றி என்றுதான் சொல்லவேண்டும்.

இவ்வளவு கவனமாக காமராஜர் அங்கத்தினர்களை பொறுக்கி எடுத்திருந்தும் காங்கிரஸ் இந்தத் தமிழ் நாட்டில் தோல்வி என்றால், மக்கள் காங்கிரஸ் ஆட்சியின் பேரில் நம்பிக்கை இழந்து விட்டனர் என்பதை அப்பட்டமாக ஒத்துக்கொள்ளவேண்டும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளை காங்கிரஸ் ஆட்சி கவனிக்கவில்லை. உணவு, உடை, பிரச்சனையை ஒழுங்காக நிர்வகிக்க முடியவில்லை. பதவி கிடைத்ததும் காங்கிரஸ்காரர்கள் மக்களிடத்தில் நேரிடைத் தொடர்பு வைத்துக் கொள்ளாமல் உல்லாச வாழ்க்கை மேற்கொண்டு விட்டனர். பர்மிட் வேட்டை, சொந்தக்காரர்களுக்குச் சலுகை ஆகிய விஷயங்களில் தலையிட்டு கெட்டபெயரைச் சம்பாதித்துக் கொண்டனர். பொதுவாக அகில இந்திய ரீதியில் முற்போக்கான அரசியல் திட்டம் காங்கிரசிற்கு இல்லாமல் போய்விட்டது. யந்திர வளர்ச்சியில் கவனமில்லாமல், வேலையில்லாத் திண்டாட்டம் முதலியவைகள் தோன்ற ஆரம்பித்துவிட்டது. காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பணமூட்டைகள் நிரம்பிவிட்டனர். தீவிரமாக முற்போக்குச் சட்டங்கள் நிறைவேற்றப் படவில்லை. ஆகிய இத்தகைய காரணங்களால்தான் காங்கிரஸ் செல்வாக்கு அழிந்துவிட்டது.

காமராஜை மாற்றினால் மாத்திரம் காங்கிரஸ் புனிதமடைந்துவிடும் என்று கூறுவதில் அர்த்தமில்லை. காமராஜுக்குப்பதிலாக ஒரு சுப்பையாவோ, ஒரு கிராமணியோ தலைமைப் பீடத்தை அலங்கரித்தால் நன்மை ஏற்படப்போவதில்லை. காங்கிரஸ்காரர்கள் தப்பித்துக்கொள்வதற்கு காமராஜின் பேரில் சுமையைத் தூக்கிப்போட்டுவிடுகிறார்கள்.

காமராஜின் செல்வாக்கை காங்கிரஸ்காரர்களால் வீழ்த்தமுடியாது. காங்கிரசே ஒழிந்தால்தான் காமராஜை பதவியிலிருந்து நீக்கமுடியும். காமராஜ் பெரிய அரசியல் தந்திரக்காரர். சமீபத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் அவருக்கு ஒரு சரிவு வர இருந்தது. எப்படியோ அதற்கும் தப்பித்துக்கொண்டார். திரு. G. D. நாயுடு அவர்களால் காமராஜின் செல்வாக்குத் தகர்ந்துவிடும் என்று பொதுமக்களும், குறிப்பாக காங்கிரஸ்காரர்களில் சிலரும் எதிர்பார்த்தனர். விஷயம் வேறுவிதமாக முடிந்துவிட்டது. ஆகவே காங்கிரசை இனி புனிதப்படுத்தமுடியாது. அது தானே அழிந்துவிடும். இனி இந்த நாட்டில் முற்போக்குவாதிகள்தான் ஆட்சிசெய்வார்கள் பொது மக்கள் கால நிலையை அனுசரித்து இனி அமையவிருக்கும் காங்கிரஸ் அல்லாத மந்திரிசபைக்கு ஆக்கம்தரவேண்டுகிறோம்.


பீடிகளில் சிறந்தது

குயில் மார்க் பீடி

ஜவுளிக்கடை வீதியில்

புதிதாகத் திறக்கப்பட்டிருக்கும்

செண்ட்ரல் சப்ளை கம்பெனிக்கு

விஜயம்செய்யுங்கள்

சோப் & கன்பக்ஷனரி தயாரிப்பாளர்கள்

தாராபுரம்


...ர்: வெளியிடுபவர்:- பண்டிட் ஜெயிலானி விஷாரத், தாராபுரம். அச்சிட்டது:- ராயல் பிரஸ், கோயமுத்தூர்